[*1995 ஏப்ரல் 21*

386—

மாட்டுப் பண்ணைகள் அமைக்க கடன் உதவி

***25267—திருமதி அ.தி. சரஸ்வதி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாளவாடி மலைப் பகுதியில் திம்மம், ஆசனூர், கெத்தேசால், தலைமலை, நெய்தாளபுரம், அருள்வாடி, ஏரஹள்ளி, முதுகரை, பனஹள்ளி, மெட்டல்வாடி ஆகிய பகுதிகளில் ஜெர்சி மாட்டுப் பண்ணைகள் அமைக்க முன்வருவோருக்கு அரசு கடன் உதவி வழங்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாளவாடி மலைப்பகுதி அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பழங்குடியினர் நலத்திட்டம் பகுதியில் சேர்க்கப்படாததினால் ஜெர்ஸி மாட்டுப்பண்ணைகள் அமைக்க முன் வருவோருக்கு அரசு கடன் உதவி வழங்குவது தற்போது செயற்குறிப்பிலில்லை.

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றி நின்று பகை முடித்து, சூழ்ந்து வந்த சதியழித்து வெற்றியெனும் தேரேறி உலா வரும் வீராங்கனை, நான் நித்தம் போற்றி வணங்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் ஏழைகளின், விவசாயிகளின் வாழ்வு மலர, பால் விலை ஒரு ரூபாய் அதிகப்படுத்தியதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி நன்றி கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னாலும் மறுபரிசீலனை செய்து தாளவாடி மலைப் பகுதியில் கிட்டத்தட்ட 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அந்த பகுதி மக்களின் நலனில் அக்கறை கொண்டு மறுபரிசீலனை செய்து அங்கே ஜெர்ஸி மாட்டுப் பண்ணைகள் அமைக்க அரசு கடன் உதவி வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தாளவாடி பகுதியை மலைவாழ்ப்பகுதிகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு ஆவனசெய்வதற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் அவர்களுக்குப் பரிந்துரை செய்து இருக்கின்றார்கள். அப்பகுதியிலே இருந்து பிரேரணைகள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி வந்துகொண்டிருப்பதால் இப்பகுதியை பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தின் கீழ் சேர்த்தபிறகு இத்திட்டத்தில் கால்நடைகளுக்கான உதவித் தொகை வழங்குவதற்கு இயலும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த திட்டத்திற்கு அரசு கடனுதவி வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபரிசீலனை செய்து ஆவனசெய்யவேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை சம்பந்தப்பட்ட கேள்வியாக இருப்பதால், ஆசனூர் மலைப் பகுதியில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தம் இல்லாத கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இருக்காது. இது சம்பந்தப்பட்ட துணைக் கேள்வியாக இருக்க வேண்டும்.

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், தாளவாடிப் பகுதி பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் துணை இயக்கப் பகுதியில் சேர்ப்பது சம்பந்தமாக தம்முடைய அறிக்கையில் பழங்குடியினர் நலத் துணைத் திட்டப் பகுதியில் சேர்க்கவேண்டிய பகுதியில் மொத்தம் 10 ஆயிரம் மக்கள் தொகை கொண்டதாக இருக்கவேண்டும். அதில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் அந்தப் பகுதியில் மலைவாழ் மக்களாக இருந்திடவேண்டும். மேலும் இப்பகுதி ஒன்றுக்கொன்று

தொடர்புள்ளதாக இருக்கவேண்டும். இப்படி இருக்குமேயானால்தான் அது குறித்து ஆராயப்படும் என்று கூறியுள்ளார்கள். அப்பகுதி துணைத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் என்று அறிவுரை கூறியுள்ளார்கள். ஆனால் தாளவாடிப் பகுதி இந்த இரு விதிமுறைகளுக்குட்படவில்லை என்பதனால் பரிந்துரை செய்ய இயலாது என்று அறிக்கை தந்துள்ளார்கள் என்பதனை--ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் அறிக்கை தந்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி *அ.தி. சரஸ்வதி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் 10 ஆயிரத்திற்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு துணைக் கேள்விகள் முடிந்து விட்டன. மூன்றாவது துணைக் கேள்வி இல்லை. கேள்வி கேட்க எல்லோரும் கைக் தூக்குகிறார்கள்.

அடுத்து வினா எண் 387, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

387—

கபிலர்மலை தொகுதியில் கோழிக் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல்

**44817—திருமதி ப. சரஸ்வதி:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோழிக் குஞ்சு பொரிப்பகம் சேலம் மாவட்டம், நாமக்கல் அருகில் கபிலர்மலை தொகுதியில் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கபிலர்மலை தொகுதியில் கோழிக்குஞ்சு பொரிப்பகம் நிறுவ உத்தேசம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.